OS.No. 49/2011

Dated : 16.04.2024

Time: 11.58 a.m to p.m

P.W- 1 சாட்சி அய்யாவு அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) 1ம் பிரதிவாதி என்னுடைய மாமனார். 4ம் பிரதிவாதி செல்வி என்னுடைய மனைவி. 2ம் பிரதிவாதி என் மனைவியின் சகோதரி. மேற்படி தாவா சொத்துக் கள் என்னுடைய மாமனார் மற்றம் மாமியாருக்கு முழு உரிமையான சொத்து என்றால் சரிதான். வாசாஆ.1 ல் சொல்லப்பட்ட சர்வே எண். 5/1 ஏ 3, விஸ்தீரணம் 3 ஏக்கர் 70 செண்ட் பற்றி என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அதை ஏற்கனவே எனக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் அதனால் சொல்லவில்லை.

2) மேற்படி வாசாஆ.1 ட்ல சொல்லப்பட்ட சர்வே எண். 1/6ல் விஸ்தீரணம் 2.56 ஏக்கர் மற்றும் 169/1 ல் 4 ஏக்கர் 37 செண்ட் நிலத்தை குறித்து 1ம் பிரதிவாதி அவரது மகளான 2ம் பிரதிவாதிக்கு 19.05.2011 ல் ஒரு தான பத்திரம் எழுதி வைத்துவிட்டார் என்றால் அவரை தூக்கி சென்று எழுதிக்கொண்டார்கள். நான் 20.05.2011 ல் மேற்சொன்ன 3.70 ஏக்கர் நிலத்தை நான் என் மாமியார் அலமேலுவிடம் இருந்து கிரயம் பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தப்படி அதை நான் கிரயம் பெற்றேன்.

3) ஆனால் நான் பெற்ற கிரயத்தில் அந்த ஒப்பந்தம் பற்றி விவரம் இல்லை. மேற்படி தானம் பெற்ற சொத்தை தான் 2 ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்தார். 3ம் பிரதிவாதியின் பெயரில் தான் அந்த சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் உள்ளது. அந்த வருவாய் ஆவணங்கள் மாற்றம் குறித்து நான் ஆட்சேபணை செய்யவில்லை. ஒரே நாளில் நான் ஊரில் இல்லாத போது செய்துவிட்டார்கள். 2,3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும்.

4) மேற்படி வாசாஆ.1 போலியானது என எதிர் வழக்குரையில் பிரதிவாதிகள்

சொல்லியிருந்தும் அதை நிரூபிக்க நான் கையெழுத்து நிபுனருக்கு ஆவணத்தை அனுப்ப நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இதுவரை நாங்கள் அந்த ஆவணத்தை அனுப்பவில்லை. வாசாஆ.1 ன் மொத்த சொத்துக்கள் 10.86 ஏக்கர் ஆகும். மேற்படி ஒப்பந்த தேதியிலேயே மேற்படி சொத்துக்கள் சுமார் 40 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றால் நான் பேசியதே ரூ.47,00,000/- ஆகும்.

5) வாசாஆ.1 ல் கிரய தொகை ரூ.9,40,000/- என சொல்லப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நான் கிரயம் பெற்ற பத்திரத்திலும், வழக்குரையிலும் ஒப்பந்தப்படி தான் கிரயம் பெற்றேன் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். அந்த சொத்து குறித்து நான் கிரயம் பெற்றுவிட்டதால் அதை வழக்கில் குறிப்பிடவில்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan

**Subordinate Judge,**

**Attur.**